ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2380/27 - 2024 අප්‍රේල් මස 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.04.18
*2380/27 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ 94/47* (VIII)

***(269 ஆம் அத்தியாயமான)* நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

*6(2)(ஆ) மற்றும் 21(2)(ஆ) ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை*

*(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)(ஆ) என்னும் பிரிவாலும் 21(2)(ஆ) என்னும் பிரிவாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இந்தக் கட்டளை மூலம் :-*

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட “பம்பரகெலே ஸ்ரீ மகா விஹாரை புனிதப் பிரதேசம்” என அழைக்கப்படும் காணி இடப்பிரதேசத்துக்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன் ; அத்துடன்

(ஆ) நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக மேலே வெளிப்படுத்தப்பட்டதான “பம்பரகெலே ஸ்ரீ மகா விஹாரை புனிதப் பிரதேசம்” உருவரைப் பௌதீகத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமெனவும் பணிக்கின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க,**
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2024, ஏப்பிறல் 09.*

**அட்டவணை**

**பம்பரகெலே ஸ்ரீ மகா விஹாரை புனித பிரதேச இடப்பரப்பினைக் கொண்ட பிரதேசம்**

மத்திய மாகாணத்தில், நுவரெலியா நிருவாக மாவட்டத்திலுள்ள நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, ஒல பலாத்த கோரலே சிறு பிரிவின், பம்பரகெலே (பிரிவு இலக்கம் 1, பம்பரகெலே, நுவரெலியா மாநகர சபை எல்லைக்குள் நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவினுள்) நிலஅளவையாளர் தலைமையதிபதியின் 2018, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதிய சுவட்டுத்திட்ட இல. NU/NEW/2017/348 இலுள்ள காணித்துண்டு இல. A, B மற்றும் C எனக் குறித்துக்காட்டப்பட்டுள்ளவாறான பரப்பளவில் 0.7805 ஹெக்டெயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுமான அக்காணியின் இடப்பரப்பு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :-

**காணித்துண்டு இலக்கம்** A - (0.2336 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள) பன்சலவத்த

வடக்கு : பூர்வாங்க வரைபட இல. 2288 இன் காணித்துண்டு இலக்கம் 36, பூர்வாங்க வரைபட இல. 1064 இன் காணித்துண்டு இலக்கம் 03 மற்றும் காணித்துண்டு இலக்கம் 04 ;
கிழக்கு : E பூர்வாங்க வரைபட இல. A 1064 இன் காணித்துண்டு இலக்கம் 03 மற்றும் வீதி ;
தெற்கு : வீதி மற்றும் காணித்துண்டு இலக்கம் B ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் B மற்றும் E பூர்வாங்க வரைபட இல. 2288 இன் காணித்துண்டு இலக்கம் 36.

**காணித்துண்டு இலக்கம்** B - (0.7541 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள) பன்சலவத்த

வடக்கு : படிக்கட்டு, பூர்வாங்க வரைபட இல. 2288 இன் காணித்துண்டு இலக்கம் 36 மற்றும் காணித்துண்டு இலக்கம் A ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் A மற்றும் வீதி ;
தெற்கு : வீதி மற்றும் காணித்துண்டு இலக்கம் D, E, C, F மற்றும் G ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் G பூர்வாங்க வரைபட இல. A இன் காணித்துண்டு இலக்கம் 1, பூர்வாங்க வரைபட இல. E, A 3187, காணித்துண்டு இலக்கம் 48 மற்றும் புதிய பூர்வாங்க வரைபட இல. 4 இன் தாள் 5 இலுள்ள படிக்கட்டு.

**காணித்துண்டு இலக்கம்** C - (0.0090 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள) பன்சலவத்த

வடக்கு : காணித்துண்டு இலக்கம் B ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் B மற்றும் காணித்துண்டு இலக்கம் E ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் E, காணித்துண்டு இலக்கம் F மற்றும் காணித்துண்டு இலக்கம் B ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் B.

EOG 04-0154/ 1

---

ச. வ. பீ 94/47 (III)

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

6(2)(ஆ) மற்றும் 21(2)(ஆ) ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)(ஆ) மற்றும் 21(2)(ஆ) என்னும் பிரிவாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இந்தக் கட்டளை மூலம் :-

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "வெஹெரகல மகா விஹாரை புனிதப் பிரதேசம்" என அழைக்கப்படும் காணி இடப்பிரதேசத்துக்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன் ; அத்துடன்

(ஆ) நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக மேலே வெளிப்படுத்தப்பட்டதான “வெஹெரகல மகா விஹாரை புனிதப் பிரதேசம்” உருவரைப் பௌதீகத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமெனவும் பணிக்கின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க,**
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
2024, ஏப்பிறல் 09.

**அட்டவணை**

**வெஹெரகல மகா விஹாரை புனித பிரதேச இடப்பரப்பினைக் கொண்ட பிரதேசம்**

வடமேல் மாகாணத்தில், புத்தளம் நிருவாக மாவட்டத்திலுள்ள கருவலகஸ்வெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, ராஜவன்னி பத்துவ சிறு பிரிவின், வெஹெரகல கிராமத்தில் அமைந்துள்ள, நிலஅளவையாளர் தலைமையதிபதியின் 2002, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய சுவட்டுத்திட்ட இ. கி. வ. இலக்கம் 22 என்பதில் குறித்துக்காட்டப்பட்டுள்ளவாறான காணித்துண்டு இல. 4873 என்னும் பரப்பளவில் 7.567 ஹெக்டெயர் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுமான அக்காணியின் இடப்பரப்பு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு :-

**காணித்துண்டு இலக்கம் 4873 - வெஹெரகலவத்த**

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 4874 ;
கிழக்கு : வெம்புவெவ (இ. கி. வ. 3475) இல் கிராம எல்லை மற்றும் வீதி (பிரதேச சபை) காணித்துண்டு இலக்கம் 4874 இன் ஒரு பகுதி ;
தெற்கு : வீதி (பிரதேச சபை) காணித்துண்டு இலக்கம் 4874 இன் ஒரு பகுதி ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 4874.

EOG 04-0154/ 2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.